பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 12உ (28—8—67) திங்கள் ★ வெளியூர்: ஆவணி 13 (29—8—67) செவ்வாய் [இதழ்: 63

ஆன் யுவர் மார்ச்...லெப்ட் . ரைட்...!

தளபதி --
கமாண்டர் --
காப்டன்கள் --

★

★ **தீஎழுப்பும் சாதனம்** (அதாவது, 'சிகரெட் லைட்டர்' என்ற பெயரில் ஒரு கருவி!)

★ **பிரம்புகள்** ('குண்டாந்தடி'—கொச்சையாகச் சொன்னால்!)

★ **கரண்ட்டெஸ்டர்கள்** (மின்சார நாச வேலைகளுக்கோ?)

★ **கத்திகள்** (பேனாக் கத்தியா — பிச்சுவாவா—அரிவாளா— என்று பாகுபடுத்தப்படவில்லை பார்த்தீர்களா!)

★ **மணிபர்சுகள்** ('வருகின்ற' பணத்தைப் போடுவதற்கா, 'செலவழிக்கும்' பணத்தை எடுப்பதற்கா என்பது இரகசியம்!)

★ **சட்டைகள்** (ஆள் மாருட்டம் செய்வதற்கு என்று கேட்கிறீர்களா?)

★ **துண்டுகள்** (கழுத்தில் சுருட்டிவிட்டுக்கொண்டு 'என்ன வாத்தியாரே' என்பதற்குத்தான்!)

★ **பனியன்கள்** (அப்படி யாராவது சட்டையைப் பிடித்திழுத்து 'மாட்டினயா?' என்று கையும் களவுமாகப் பிடித்துவிட்டாலும், 'அதற்கு வேறு ஆளைப் பார்' என்று பனியனுடனாவது உருவிக்கொண்டு தப்பித்துக் கொள்ள!)

★ **'பைல்'கள்** (கொளுத்துவதற்கு அல்ல; இன்னின்ன பேட்டையில்—இந்த இந்தத் தோஸ்துகள்—எந்த எந்த வஸ்தாதுகளின் தலைமையில் செயல்படுகிறார்கள் என்பதனைக் காட்ட!)

அய்யோ! நேரு விரும்பிய வெண்புரு—உலகின் சமாதானச் சின்னமான வெண்புரு—நடுவில் என்ன பாவம் செய்ததோ? தனது பெயரைத் தமிழ்நாடு காங்கிரசின் ஒரு சேனைக்கு அளித்துவிட்டு, எங்கோ சென்று கூண்டில் ஒளிந்துகொண்டுவிட்டது!

வெண்புருச் சேனை புறப்பட்டுவிட்டது; புறப்படச் சொன்னவர், இப்போது புதுடில்லியில் இருக்கிறார்!

சேனை புறப்பட்டிருக்கிறது — தேனாம்பேட்டையிலிருந்து!

போகாத பயணம்! மற்றவர்களுக்குப் புரியாத வழி! நல்லவர்கள் தெரிந்துகொள்ளக் கூடாத நோக்கம்!

'அமைதி விரும்பும் அணி' என்ற விலாசத்தில் துவக்கப்பட்டிருக்கும் அந்த நிகழ்ச்சியில், 'வீரமணம்' கமழ்ந்ததாம்!

செஞ்சிலுவைச் சங்கத்துக்கு வன்முறைப் பயிற்சித் தேவையா?

அணைக்கும் கரங்களில் ஆயுதம் இருக்க வேண்டுமா? இந்தச் சேனையில் சேர விரும்பியவர்களுக்கு, 'துவக்கியவர்' தொகுத்து அளித்துள்ள வேத பாடம் என்ன தெரியுமா?—

'இரத்தத்தைக்கண்டு பயப்படாதவர்களாக இருக்கவேண்டும்'

கொள்கை புரிகிறதா? குணம் தெரிகிறதா?

'தமிழ்' ஒன்றை முதலாக வைத்து, அரசியலில் உலவிக்கொண்டிருக்கும் இந்தச் சேனையின் 'துவக்குபவர்', பொறுப்பாளர்களுக்கு வைத்துள்ள பெயர்களைப் பாருங்கள்:—

தளபதி---கமாண்டர்---காப்டன்!

வெண்புருச் சேனையில் இத்தனைப் பயங்கரம் ஏன்? இப்படிப்பட்ட 'தமிழ் வளம்'தான் எதற்கு?

வெண்புரு அணி—அல்லது அமைப்பு—அல்லது குழு என்று அழைத்தால் என்ன?

'சேனை' என்ற 'படைப் பெயர்' ஏன்?

தமிழ் நாடு காங்கிரசு இனி கலைக்கப்படப் போகிறதா? அதன் பெரிய 'புள்ளி'கள் அனைவரும், 'பொறுப்பு'க்கள் அனைத்தையும் துவக்குபவரிடமும், தளபதி—கமாண்டர்—காப்டன் ஆகியோரிடமும் கொடுத்துவிட்டு துறவறம் மேற்கொள்ளப் போகிறார்களா?

பாகிஸ்தான் தாக்குதலின்போது இப்படி ஒரு சேனையைக் காணோமே?

சீன ஆக்கிரமிப்பு இன்னமும்தான் இருக்கிறது; அதற்காக ஒரு படையை ஆரம்பித்திருக்கலாமே!

'ஆட்சியில் இருப்பதற்கே அருகதையற்றவர்கள்' எனக் கருதி—ஆட்சியை ஒப்படைக்க மறுத்து—இவர்களுடைய எண்ணிக்கையை 50-ஆகக் குறைத்த தமிழக மக்களை, தமிழ்நாடு காங்கிரசின் இனி வரும் இந்த அதிகாரபூர்வமான அமைப்பா பாதுகாக்கப் போகிறது?

'ஊரை நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று பகலில் வேடம்போட்டாலும்—'இரவு வேலை' செய்யும் ஒருவன்!

சிகரெட் லைட்டர், பிரம்பு, மணிபர்சு, கத்தி, கரண்ட் டெஸ்டர் ஆகியவைகளுடன் இரத்தத்தைக் கிளப்புபவர்களுக்கு, பாவம் -- வெண்புரு—தனது பெயரைக் கொடுத்திருக்கிறது!

காங்கிரசுக் கட்சி அந்த நாளில் செய்த தியாகத்தை விட இந்த பறவை இனம் இப்போது செய்திருக்கும் பெயர் தானம், எண்ணிப் போற்றுதற்குரியதுதான்!

பொறுத்திருந்து பார்ப்போம்—சேனையின் 'சாதனை'களை!

—எஸ். ஆர்.

தெலுங்கில் தொலைபேசி அட்டவணை!

ஆந்திரத்தில் ஏற்பாடு

ஐதராபாத், ஆக. 25—
ஆந்திர மாநிலத்தில் தொலைபேசி எண் அட்டவணை (டைரக்டரி) தெலுங்கில் அச்சிட்டு வழங்கப்படவிருக்கிறது.

தொலைபேசித்துறை ஐதராபாத் மாவட்ட நிர்வாகியான திரு. கே. எல். ரெட்டி, கூடிய விரைவில் தெலுங்கில் இதனை அச்சிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிவித்துள்ளார்.

க. அறிவழகன் பதவி உறுதிமொழி ஏற்றார்

சென்னை, ஆக. 28—
சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர்த் தொகுதியிலிருந்து தமிழக மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தோழர் க. அறிவழகன் எம்.ஏ., இன்று மேலவைத் தலைவர் திரு. மாணிக்கவேலு முன்னிலையில், பதவி உறுதிமொழி ஏற்றார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து, மேலவைக் கொறடா அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிந்தனையாளர் பார்வைக்கு:

★

"மாநிலங்களின் முன்னேற்றத்தில்தான் நாட்டின் முன்னேற்றம் இருக்கிறது. மாநிலங்கள் வளம் பெற்றால், நாடு தானாகவே வளம் பெறும்."

--முதலமைச்சர் அண்ணா
(நிட்டக் குழுவில் பதவிபெற்ற வெங்கட்ராமனுக்கு நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில்)

"நாடு முன்னேறும்போது தான் மாநிலங்கள் முன்னேறும்."

--தலைமையமைச்சர் இந்திரா
(குடியரசு நாள் செய்தியில்)

சென்னை நகரச் சீரணியினர் செயல் திட்டம்

★

சென்னை, ஆக. 27—
அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கிவைத்தசென்னைநகர் சீரணியினர் செயல் திட்டங்களை வகுக்க சீரணியினர், தனி அதிகாரி பரமசாமி தலைமையில் நேரு விளையாட்டு அரங்கில் இன்று கூடினர்.

செப்டம்பர் மூன்றும் நாளன்று சென்னை நகரிலுள்ள 12 தொகுதிகளிலும் துப்புரவுப் பணியில் ஈடுபடுவதெனவும், செப்டம்பர் 5-ஆம் நாளிலிருந்து ஊரூர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடப் பணியில் தொடர்ந்து ஈடுபடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இங்கு சீரணியினருக்கு பகல் உணவு வழங்கும் பொறுப்பை 90-வது வட்டத் தோழர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

வந்த களங்கம் வண்ணத்தால் தப்பியது!

★

வெண்புருச் சேனையினர் அணிய இருக்கும் உடையில், காந்திக் குல்லாயும் ஒன்று!

ஆனால், வெண்மைக்குப் பதிலாக ஆரஞ்சுக் கலரில் குல்லாய் போட்டுக் கொள்ளப் போகிறார்கள்!

காந்தியார் ஆத்மா, இன்னொரு முறை பிறந்து இறந்திருக்கும்!

"பாவிகள்! என் குல்லாயை வேறு களங்கப்படுத்தாமல், கலரையாவது மாற்றித் தொலைத்தார்களே!" என்றும் மனம் தேறியிருப்பார்!

காந்தியாரின் பெயரைக் காப்பாற்றாவிட்டாலும் போகிறது—அவரது குல்லாயின் வண்ணத்தையாவது காப்பாற்றினார்களே—அது போதும்!

காங்கிரசுத் தட்டியை யார் எடுத்தார்களோ தெரியவில்லை! 'தட்டி, தட்டி' என்று தொடை தட்டிப் பேசிவிட்டு, 'தட்டி இல்லேன்னா என்னாங்றேன்; முதுவுலேயே எழுதி விளம்பரம் பண்ணிக்குவோமேங்றேன்' என்று காமராசர் பேசியிருக்கிறார்!

ஜனங்கள்தான் காங்கிரசுக்காரர்களையே ஏறெடுத்தும் பார்க்கமாட்டேனென்கிறார்களே—அப்புறம் அவர்கள், முதுகை மட்டும் பார்ப்பது எப்படி முடியும்?

புறமுதுகு காட்டித் தேர்தலில் தோற்றிருப்பதால்தான் காமராசருக்கு, முதுகுக் கவனம் வந்திருக்க வேண்டும்!

நம் நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 ஆவணி 12 (28—8—67) திங்கள்

சீனுவைப் பின்பற்றி பாகிஸ்தான்

இந்தியாவைப் பகை நாடாகக் கொண்டு, வம்புக்கு இழுத்துக் கொண்டிருக்கிறது சீனு. அதே சீனுவுடன், 'விரோதிக்கு விரோதி நண்பன்' என்ற முறையில், பாகிஸ்தான் நட்புறவு கொண்டிருக் கிறது.

இந்தியாவைத் தனது பகை நாடாகச் சீனு கொண்டிருக்கிறது என்பதற்காக, சீனுவைப் போலவே, இந்தியாவைப் பாகிஸ்தானும் எப்பொழுதும் அச்சுறுத்திக்கொண்டே இருக்கவேண்டும் என்ப தில்லை. அவ்வாறு அச்சுறுத்திக்கொண்டிருப்பதிலும், சீனு கையாண்டுவருகின்ற முறைகளையே எழுத்துக்கு எழுத்து மாறு படாத வகையில், பாகிஸ்தான் கையாள வேண்டுமென்பதில்லை.

ஆனல் பாகிஸ்தானே, சீனுவை அப்படியே பின்பற்றி, இந்தியாவுக்கு எதிராக ஒவ்வொரு நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகிறது. இந்தியாவுக்கு இடுக்கண் விளைவிப்பதில் சீனுவைப் பின்பற்றுவதன் மூலம், தன்னையும், வல்லரசுகளில் ஒன்ருக உலகம் ஏற்றுக்கொள்ளும் எனப் பாகிஸ்தான் நினைத்துக்கொள்ளுகிறது போலும்!

சில நாட்களுக்கு முன்னல், பீகிங் நகரத்திலிருக்கின்ற இந்தியத் தூதுவரக அலுவலர் மூவரை, 'வேவு பார்த்தனர்' எனக் குற்றஞ்சாட்டி, சீனு வெளியேற்றிற்று. அந்த இந்திய அதிகாரிகள் மூவரையும் நாட்டைவிட்டு வெளியேறவிடாமல் கைது செய்ததுடன், காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கித் துன்புறுத்தி, அவமானத்திற்கும் உள்ளாக்கியது.

இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கு சீனு இழைத்துள்ள அநீதி, இந்த நாட்டு மக்களின் நினைப்பில் பசுமையாக இருந்துவருகின்ற பொழுதே, சீனுவை முன்மாதிரியாகக்கொண்டு, இந்தியத் தூதரக அதிகாரிகள் மூவரை, 'அடையாளச் சீட்டு இல்லை' எனக் குற்றஞ் சாட்டி, நாட்டைவிட்டு வெளியேற்றிவிட்டிருக்கிறது பாகிஸ்தான்.

"இந்திய அதிகாரிகள் மூவரும் 'அடையாளச் சீட்டு' வைத்திருக்கவில்லை" என்ற பாகிஸ்தானின் குற்றச்சாட்டில் துளியும் உண்மை இல்லை. பாகிஸ்தானின் குற்றச்சாட்டு உண்மையானதுதான் என வைத்துக்கொண்டாலும், அடையாளச் சீட்டை வைத்திருக்காதது, ஒரு நாட்டின் தூதரக அதிகாரிகளை நாட்டைவிட்டு வெளியேற்றுவதற்குரிய பெரும் குற்றமாகக்கொள்ள முடியாது.

இந்திய அதிகாரிகள் அடையாளச் சீட்டு வைத்திருக்கவில்லை என்ற குற்றச்சாட்டு உண்மையாக இருக்கும்பட்சத்தில், அக்குற்றச்சாட்டுக்குள்ளான அதிகாரிகளை வெளியேற்ற விரும்பும்பட்சத்தில், முறைப்படி நாட்டைவிட்டு வெளியேற்றுவதைத்தான் பாகிஸ்தான் மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனல் பாகிஸ்தானே, முறைப்படி நடந்துகொள்ளவில்லை. தன்னல் குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகளைக் காவல்நிலையத்தில் பிடித்துவைத்து அவமானப் படுத்தி இருக்கின்றது.

பொழுதுபோக்கிற்காக உலாவச் சென்ற இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மூவரைக் கைதுசெய்து போலீசு நிலையத்தில் காவலில் வைத்து அவமானப்படுத்திய அளவுடனும் பாகிஸ்தான் இருந்திடவில்லை.

இந்திய அதிகாரிகள் மூவரையும் கைது செய்த போலீசு நிலைய அதிகாரி, அவர்களைக் காவல் நிலையத்தில் நிறுத்திவைத்து அறைந்தும், அடித்தும் துன்புறுத்தியுள்ளார். இதைவிடக் காட்டுமிராண்டிச் செயல் வேறு எதுவும் இருக்க முடியாது.

இந்திய அதிகாரிகளுக்குப் பாகிஸ்தானுல் இழைக்கப்பட்டிருக்கின்ற கொடுமை, இந்த நாட்டு மக்களுக்கு ஆத்திரமூட்டக்கூடியதாகும். இதன் விளைவாக, பாகிஸ்தான்மீது இந்த நாட்டு மக்களுக்கு வெறுப்புணர்ச்சி வளரத்தான் செய்யும்.

இப்பொழுது பாகிஸ்தானில் இந்திய அதிகாரிகள் மூவர் அனுபவித்திருக்கின்ற கொடுமை, சில நாட்களுக்குமுன் இந்திய அதிகாரிகள் சீனுவினுல் அடைந்துள்ள கொடுமையைப் போன்றதேயாகும்.

இப்படி வெளிநாடுகளிலுள்ள அரசாங்க அதிகாரிகள் காட்டுமிராண்டித்தனமாகவும் அநாகரிகமாகவும் தாக்கப்படுவதை, இந்த நாட்டு மக்கள் என்றென்றும் பொறுமையாகத் தாங்கிக்கொள்ள மாட்டார்கள். தங்களுடைய தன்மானத்துக்குப் பாகிஸ்தான் விட்ட அறைகூவலாகத்தான், அதிகாரிகள் தாக்கப்பட்டிருக்கின்ற இழி செயலை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளுவர்.

—கா. க.

அரசின் உணவுக் கொள்கை பற்றி காங்கிரசாரின் அபத்தக் கூச்சல்!

பதிலளித்து அண்ணு விளக்கம்

திருநெல்வேலி, ஆக. 24—

நேற்று திருவைகுண்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் உரையாற்றுகையில் காங்கிரசுத் தலைவர்களின் கூற்றுக்கும், அவர்கள் எழுப்பும் வினுக்களுக்கும் தக்க பதிலளித்தார்.

"படியரிசித் திட்டத்தை மாநிலம் முழுவதிலும் செயல்படுத்தாதது ஏன்?" என்று காங்கிரசுத் தலைவர்கள் கேட்பது நியாயமற்ற—அரசியல் உள்நோக்கமுடைய கோரிக்கையாகும்" என்பதைச் சுட்டிக்காட்டி அண்ணு விளக்கியதாவது :

(இதன் தொடர்ச்சி 5-ம் பத்தி பார்க்கவும்)

ஆங்கிலஒழிப்பு முயற்சி படுதோல்வி

இந்தி மாநிலத்திலேயே இந்தியை சிந்துவாரில்லை

அலகாபாத், ஆக. 24—

உ. பி. பல்கலைக் கழகங்களில் இவ்வாண்டு முதல் ஆங்கிலம் கட்டாயப் பாடமில்லை; மாணவர்கள் விருப்பப்பட்டால் அதை எடுத்துக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆயினும், மாணவர்கள் ஆங்கிலத்தையே அதிகம் விரும்புகின்றனர்.

பி. ஏ. வகுப்பில் இவ்வாண்டு இலட்சுமணபுரி பல்கலைக் கழகத்தில் 1,100 மாணவர்கள் சேர்ந்திருக்கிருர்கள்; இவர்களில் 1,000 பேர் ஆங்கிலத்தையே எடுத்துக்கொண்டிருக்கிருர்கள்; இதை முன்னிட்டு, மற்ருெரு பிரிவை ஆரம்பிக்க வேண்டியிருந்தது.

எம்.ஏ. வகுப்பில் சென்ற ஆண்டு 80 பேர் ஆங்கிலம் எடுத்திருந்தனர். இவ்வாண்டு 150 பேர் எடுத்திருக்கின்றனர்.

சிரிப்பவரெல்லாம் சிரியுங்கள்!

"அனஜ்னு உட்பதான் பனே டீதி
ஒச்மா ஒச்சு கரி நகோ"

இது, குசராத் மொழிப் பத்திரிகை ஒன்றில், அரசினர் கொடுத்திருந்த விளம்பரம்; இதன் மொழிபெயர்ப்பு இது தான் :—

"உணவு உற்பத்தியை எவ்வளவுக்குக் குறைக்க முடியுமோ அவ்வளவுக்குக் குறையுங்கள்!"

இந்த முழக்கம், அரசினரே கொடுத்த 'அச்சுப் பிளாக்கில்' இருந்ததா அல்லது, பத்திரிகையின் அச்சுப் பிழையா என்பது இன்னம் தெளிவாக இல்லை!

இருந்தாலும், படித்தவுடன் சிரிக்கத் தோன்றுகிறது! அது போதும்!

திருமதி பண்டாரநாயகாவின் இனவெறிப் பிரசாரம்

இலங்கை நாடாளுமன்றத்தில் கண்டனம்

கோழும்பு, ஆக. 26—

"தமிழகத்தில் தி. மு. கழக ஆட்சி ஏற்பட்டிருப்பதனுல் இலங்கைக்கு ஆபத்து ஏற்படும் என்று இலங்கை எதிர்க் கட்சித் தலைவியான திருமதி சிரிமாவோ பண்டார நாயகா பொய்ப் பிரசாரம் செய்துவருகிருர்; அவர் இவ்வாறு பொய்ப் பிரசாரம் செய்து இலங்கையில் இனவெறியை ஏற்படுத்தக்கூடாது—வகுப்பு வாதத்திற்கு வித்திடக் கூடாது"

என்று இலங்கை மக்கள்சபையில், உறுப்பினர் பேராசிரியர் திரு. கா. பொ. இரத்தினம், தமிழில் ஆற்றிய நீண்டதோர் உரையில் சுட்டிக்காட்டினுர். அவர் மேலும் கூறியதாவது :—

"இங்கே (இலங்கை மக்கள்சபையில்) சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திலுள்ள பொருளாதார அடிப்படையில் ஆளுகின்ற தேசிய அரசாங்கத்தை அசைக்க முடியாதென அறிந்த எதிர்க் கட்சித் தலைவியார், மீண்டும் இந்நாட்டிலே வகுப்புவாதத்தை உண்டாக்கவும், இனவெறியை வளர்க்கவும் முயலுவது மிகவும் கவலைக்குரியதாகும்.

இந்த வரவு-செலவுத் திட்டம் பற்றி இப்பொழுது பல இடங்களிலே பேசுகின்ற எதிர்க் கட்சித் தலைவியார், 'திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்திலே ஏற்பட்டதாலே இந்நாட்டுச் சிங்கள மக்கள் அழிவையே அடைவார்கள்' என்று கூறுவதை நாங்கள் கேட்கிருேம். இது வெறும் துவேஷப் பொய்ப் பிரசாரம் என்பதை இங்கே நாங்கள் கூறக் கடமைப்பட்டிருக்கிருேம்.

"உண்மையிலே, அரசியல் அரிச்சுவடி தெரிந்தவர்களுக்கும் தெரியும்—'தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஒரு மாநில ஆட்சிதான்' என்பது. அது, வேறெந்த நாட்டினுடைய அரசியலிலும் தலையிட முடியாத ஒரு நிலையிலே உள்ளது. இப்படிப்பட்ட ஓர் ஆட்சியால், இலங்கையிலுள்ள சிங்கள மக்களுடைய—பெரும்பான்மையினராக இருக்கின்றவர்களுடைய வாழ்வு பாதிக்கப்படுமென்று நாளும் பொழுதும் சொல்வது வெறுக்கத்தக்க—பொருத்தமில்லாத கூற்ருகும்.

"ஆகவே, இப்படிப்பட்ட பொய்ப் பிரசாரங்களிலே ஈடுபட்டு மீண்டும் இந்நாட்டிலே வகுப்புத் துவேஷத்தை உண்டாக்காமல் நாடு முன்னேற்றம் அடையத்தக்க முறையில்—பொருளாதாரக் கொள்கையைச் சிறப்புற நடத்தத்தக்க முறையில் எதிர்க் கட்சித் தலைவியார் சிரிமாவோ பண்டாரநாயகா முயற்சி செய்ய வேண்டுமென—இந்நாட்டின் நலன் கருதி—கேட்டுக் கொள்கிறேன்."

(-1ம் பத்தித் தொடர்ச்சி)

"இந்த மாநிலத்தின் மொத்த விளைச்சலான சுமார் 40 இலட்சம் டன்னில் 8 இலட்சம் டன் நெல்லை மட்டுமே கொள்முதல் செய்ய அரசு திட்டமிட்டது.

"இதுவரை கொள்முதல் செய்யப்பட்டு தற்போது கையிருப்பில் உள்ள அரிசி, சட்டபூர்வமான பங்கீட்டு முறை நடைமுறையிலிருக்கும் சென்னைக்கும், கோவைக்கும்தான் வரும். சட்டபூர்வ பங்கீட்டு முறை இல்லாத மற்றப் பகுதிகளில் வெளிக் கடைகளிலும் அரிசி விற்கப்படுகிறது.

இப்போது மேலும் அதிகமாகக் கொள்முதல் செய்ய அரசு முனைந்தால், அது, விவசாயிகளிடை உற்பத்தியைப் பெருக்குவதில் உள்ள ஊக்கத்துக்கு ஊறு விளைவிப்பதாகும்.

வருகிற அறுவடைப் பருவத்தில் உற்பத்தி அளவு கூடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அப்போது மேலும் கூடுதலான அளவு கொள்முதல் செய்தால், மற்றப் பகுதிகளிலும் மலிவு விலையில் அரிசி கிடைக்கச் செய்யலாம்."

கொடைக்கானல் இதுதான்!

மற்ற பிற மலைவாசஸ்தலங்களைப் போல், மதுரை மாவட்டத்து கொடைக்கானலும் ஆங்கிலேயர் காலத்தில்தான் சிறப்படைந்தது! ஆங்கிலேயர் வருகைக்கு முன்பான சரித்திரச் சம்பவங்கள் கொடைக்கானலைப் பற்றி உண்டு என்ருலும், 1820-ம்ஆண்டுவாக்கில் அங்கே ஆராய்ச்சிக்காக வந்த லெப்டினண்ட் பி. எஸ். வார்ட் என்ற வெள்ளைக்காரரிலிருந்துதான் அந்த இடத்தின் முக்கியத்துவம் தோன்றுகிறது.

1834-ம் ஆண்டில், ஜே. சி. ராட்டன், சி. ஆர். காட்டன் என்னும் மற்ற இரு ஐரோப்பியர்கள் பழனிமலை மூலம் கொடைக்கானலை அடைந்தனர்; அப்போதெல்லாம் அங்கு ஒரு சில வீடுகள்தான் உண்டு. 1853-ம் ஆண்டில்கூட, அங்கு ஏழு வீடுகள்தான் இருந்திருக்கின்றன!

அதற்குப் பின்னர்தான், அங்கு வெளியார் குடியேற்றம் ஆரம்பித்தது. 'சர் லெவிங்' என்ற—அப்போது மதுரை மாவட்டக் கலெக்டராக இருந்து ஓய்வு பெற்ற வெள்ளையருக்குத்தான் இதில் பெரும் பெருமை உண்டு. 1885-ம் ஆண்டு வரை அங்கே வாழ்ந்த அவருக்கு இன்றையக் கொடைக்கானல் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. ஆக்கபூர்வமான பல வளர்ச்சிகளுக்கு உறுதுணையாயிருந்த அவரது நினைவுக்கு நன்றி கூறும் சின்னம், கொடைக்கானலில் பொறிக்கப்பட்டிருக்கிறது!

மே மாதம் முதல் ஜூலை மாதம் வரையில்தான் கொடைக்கானல் 'சீசன்' உச்சக்கட்டத்தை அடையும். ஆகஸ்டு மாதம் நல்ல பருவ நிலையைக் கொண்டிருக்காது; பயணிகள் நெரிசல் சற்று குறைந்து காணப்படுவது இந்த மாதத்தில்தான்!

பயணிகளுக்கும் தாவர ஆராய்ச்சிகள் நடத்தும் விஞ்ஞானிகளுக்கும் கொடைக்கானல், ஒரு மகிழ்ச்சியூட்டும் இடம்! ஆண்டின் எந்த நாளில் வேண்டுமானுலும், தரையில் போடும் விதை அல்லது பதியம், உடனே முளைத்துத் தோட்டமாகக் காட்சியளிக்கும் வளத்தைக் கொடைக்கானல் பெற்றிருக்கிறது!

பழனிமலைத் தொடரில் அமைந்திருக்கும் கொடைக்கானலில் மருந்துகளுக்குப் பயன்படும் பல முக்கிய தாவர மூலிகைகளும் உண்டு.

காலத்துடன்—எதிர்பார்த்த அளவுக்குப் பெய்திருக்கும் இந்த ஆண்டின் பருவமழை, கொடைக்கானலின் அழகுக்கு மேலும் மெருகு கூட்டியிருக்கிறது!

சோழவரம்

ஊராட்சி ஒன்றிய கிராமங்களுக்கு அறிவிப்பு

திருப்பெரும்புதூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி. சிவசங்கரன், பொன்னேரித் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. ப. நாகலிங்கம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஆணையாளர் ஆகியோர், செங்கற்பட்டு மாவட்டப் பொறியர் அவர்களுடன் செப்டம்பர் 2, 3 ஆகிய நாட்களில் சோழவரம் ஒன்றியத்தில் அடங்கிய கிராமச் சாலைகள்—பள்ளிகள் — சுடுகாடுகள்—குடிநீர் ஆகியவை சம்பந்தமான பிரச்சினைகளைக் கண்டு -- கேட்டு அறிவதற்காக வருகிறார்கள்; அந்தந்த ஊரின் ஊராட்சிமன்றத் தலைவரும், பொதுமக்களும் வந்திருந்து குறைகளையும் கோரிக்கைகளையும் மனுக்கள் மூலம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

காங்கிரசாரின் சின்ன புத்தி!

கழகக் கொடியைக் களவாடி சென்றனர்!

தேனி எம். ஜி. ஆர். மன்றத்துக்குச் சொந்தமான தி. மு. கழகக் கொடிக் கம்பத்தை, 18—8—67 இரவு 2-மணிக்குமேல் காங்கிரசுக்காரர்கள் வெட்டி, கொடியைக் களவாடி சென்றனர். இதுபற்றிப் போலீசுக்குப் புகார் செய்யப்பட்டது.

கழகத் தோழர்கள் மிக அமைதியாக இருக்க வேண்டுமெனச் செயலாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தோழர்கள் அமைதியாக இருக்கிறார்கள்.

மற்றொரு தனி மாநிலக் கிளர்ச்சி!

போஜ்புரி மொழியினர் முயற்சி

மொழி அடிப்படையில் போஜ்புரி மொழி பேசுவோருக்குத் தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்று கோரும் இயக்கம் விரைவில் ஆரம்பமாகும்.

"உத்தரப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதி—அதையடுத்த பீகார் மாவட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டதாக அந்த மாநிலம் இருக்கவேண்டும்" என்பது அக் கோரிக்கையாகும்.

உத்தேச பிரதேசத்தில் 4-கோடி பேர் இருப்பர் என்று கூறப்படுகிறது.

"புதிய மாநிலத்தை அமைக்கும்படிச் செய்ய எவ்வித அறப்போர் நடத்துவதென்பதைத் தீர்மானிக்க இவ்வாண்டு இறுதியில், பீகாரில் ஒரு மாநாடு நடைபெறும்" என்று சிங் கூறினார்.

அப்பகுதியைச் சேர்ந்த எல்லா அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தங்கள் கோரிக்கையை ஆதரிப்பதாக அவர் தெரிவித்தார்.

"மொழி அடிப்படையில் மாநிலங்கள் அமைக்கப்பட்டுள்ள போது, போஜ்புரி மொழியைப் பேசுவோர் மட்டும் ஏன் புறக்கணிக்கப்பட்டனர்?" என்று கேட்டார் அவர்.

இது சம்பந்தமாக குடியரசுத் தலைவர்—தலைமையமைச்சர்—நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு முறையீடுகள் செய்துகொள்ளப்பட்டுள்ளன.

டி. வி. எஸ். நிறுவனத்தில் தி.மு.க. தொழிற்சங்கம்

வில்லிவாக்கம், ஆக. 18—

'வீல்ஸ் இந்தியா லிமிடெட் எம்ப்ளாயீஸ் யூனியன்' துவக்க விழா திரு. டி. என். பார்த்தசாரதி தலைமையில் தொழிற்சாலை வாயிலிலேயே நடைபெற்றது.

அவ்வமயம், சங்கத் தலைவர் வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. பலராமன் ஆகியோர் தொழிற்சங்கம் செம்மையாகச் செயலாற்றுவதற்கு வேண்டிய அறிவுரைகளை வழங்கினார்கள்.

வருக! தியாகியே வருக!

"தி. மு. க. அரசின் தவறுகளுக்கு மக்கள் எதிர்ப்பினைக் காட்டும் வகையில், ஒரு வரிகொடா இயக்கம் ஆரம்பிக்க அனுமதிக்க வேண்டும்" என, காமராசருக்கு வேண்டுகோள் விடுத்து திருப்பூர் தியாகி இராமசாமி என்பவர்—தாராபுரத்தில்—சென்ற ஞாயிறன்று பேசியிருப்பதாக 'மெயில்' இதழ், செய்தி ஒன்று தந்திருக்கிறது.

கூட்டத்துக்கு முன்னாள் அமைச்சர் மன்றாடியார் தலைமைதாங்கினார்,

காந்தியார் வெள்ளையன் காலத்தில் நடத்திய பர்தோலி வரிகொடா இயக்கத்தைப் பற்றிய 'ஞானம்' மேடையில் இருந்த மன்றாடியாருக்கு உண்டா இல்லையா என்பது, இந்தத் திருப்பூர் தியாகிக்குத் தெரியுமோ தெரியாதோ தெரியவில்லை!

நாட்டு மக்கள் ஆதரவுடன் 'காங்கிரசுத் தியாகி'களாக ஆகியிருக்கும் திருப்பூர் இராமசாமி போன்ற சின்னதுகள்--சில்லறைகள் தங்களது வரிகொடா இயக்கச் சாதனத்தை இப்படியும் பயன்படுத்திப் பேசுகிறார்களென்றால், நிச்சயம் காந்தியார் இன்னொருமுறை பிறந்துவந்து, 'தற்கொலை'ப் பழியுடன் உயிர்துறக்கவே துணிவார்!

அன்று காந்தியார் நடத்தியது, நாடு முழுவதுக்குமான வரி கொடா இயக்கம்; அந்நியனை—அவனது ஆதிக்கத்தை எதிர்த்து நடத்திய புரட்சி!

இன்று இந்தத் தியாகி, 'வரி கொடா இயக்கம்' என்ற சிந்தனையைப் பெறக் காரணமாயிருந்தது, தி. மு. கழக அரசின் தவறுகளாம்!

காங்கிரசு செய்த தவறுதல்களுக்காகத்தான் மக்கள் அதனைப் பதவியினின்றும் நீக்கி வைத்திருக்கின்றனர்!

தி. மு. கழகத்தின் குறை—நிறைகளைக் கணக்கு எடுக்கப் போவது, இனி 1972-ல்; அதற்குள், மீண்டும் ஒரு தியாகி வேடம் போட்டுப் பார்க்க முயற்சியா?

தமிழகத்தின் 138 உறுப்பினர்களைக்கொண்ட கழக ஆட்சியின் நிர்வாகம், ஒரு அந்நிய ஆட்சியின் நிர்வாகம் போல் தென்படுகிறதா?

அப்படியானால், பெரும்பகுதி மாநிலங்களில் பதவி இழந்து—மத்திய அரசிலும் பெரும்பகுதி குறைந்து 48 பேர்களின் அங்க அசைவுகளில் உயிரை ஒட்ட வைத்துக் கொண்டிருக்கும் புதுடில்லி ஆட்சியை எந்த வகையில் வைப்பது?

'குறைகளைச் சொல்ல சட்டமன்றங்கள் இல்லையா?' என்று அப்போதெல்லாம் படித்துப் படித்துச் சொன்னவர்கள்தானே சுப்பிரமணியமும், பக்தவத்சலமும்?

இன்று அவர்களுக்குக் கீழேயே இருந்துகொண்டு, போராட்டம்கூட அல்ல—'வரி கொடா இயக்கமே நடத்துவோம்' என்று கூறும் அளவுக்கு, என்ன நடக்காதது நடந்துவிட்டது?

மத்திய அரசிடம் இருக்கும் உரிமை காரணமாக, 'வட்டியைத் தள்ளிப் போடுங்கள்' என்று கேட்டுக்கொள்வதையே குற்றமெனத் தூற்றித் திரிந்தவர்களே!—இதை, எத்தகைய தேசத் துரோகக் குற்றத்தில் சேர்ப்பது?

இதே செய்தி, காங்கிரசுப் பத்திரிகை ஒன்றில் இன்னொருவகையாக வந்துள்ளது :—

"'வரிகளைக் குறைத்து வசதிகளைப் பெருக்குவோம்' என்று ஆட்சிக்கு வந்த முன்னேற்றக் கழக அரசாங்கத்தை எதிர்த்து வரிகொடா இயக்கம் ஒன்றினை மீண்டும் நடத்த காமராசரிடம் அனுமதி கேட்க முயற்சிப்பதாக திருப்பூர் இராமசாமி அறிவித்தார்."

விதிக்கக்கூடிய இனங்களுக்கெல்லாம் அதிகபட்ச வரிகளை விதித்திருப்பது, உலகிலேயே இந்தியாவில்தான்! இருபதாண்டுக் காலத்தில் வரிவகைகள் எத்தனை உண்டோ அத்தனையையும் பயன்படுத்தி, 'வெறும் கையுடன்'தான் காங்கிரசு இறங்குமுகத்தில் இருக்கிறது!

உண்மையிலேயே வரி போடலாமென்றால்கூட, வரி விதிப்பதற்கென எந்த இனத்தையும் காங்கிரசு நிர்வாகம் விட்டு வைக்கவில்லையே!

இதை உணர்த்தும் வகையில்தான், அண்மையில் திருநெல்வேலி மாவட்டத்தில் நடந்த கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள்,

"மாநிலத்தில் வரி அல்லாத வகையில் வருமானத்தைப் பெருக்குவதற்கு அரசு அக்கறை கொண்டிருக்கிறது"

என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

காங்கிரசுத் தியாகி எந்த வரியை எதிர்த்து இயக்கம் நடத்தப்போகிறார் என்பது தெரியவில்லை!

'Public Finance' என்று ஒன்று இருப்பதும், வரி வகைகளில், 'மத்திய அரசுக்கு' என இருப்பவை எவை—'மாநில அரசுக்கு' என இருப்பவை எவை என்றும் அந்தத் தியாகி தெரிந்திருக்கவில்லை போலும்!

இன்று மக்கள் செலுத்தும் பெரும் பகுதி வரிகள் மத்திய அரசுக்கே போவதும், அதிலும் குறிப்பாக மாநில அரசு வசூலிக்கும் வரி இனங்களில் பெரும் பகுதி மத்திய அரசின் சார்பாக என்பதும், இருபதாண்டுக் காலம் ஏகோபித்த ஆட்சி புரிந்த காங்கிரசுக் கட்சியினருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லைதான்!

'தியாகியின் இயக்கம் எந்தத் திக்கை நோக்கி' என்பதை இனியேனும் சிந்திக்கட்டும்! அது எந்தத் திக்கை நோக்கியிருந்தாலும், முடிவில் புதுடில்லியையும் பாதிக்கும் என்பதனையும் அவர் முன்கூட்டியே உணரவேண்டும்!

தாராபுரம் கூட்டத்துக்கு அவர் ஏறிவந்த இரயில் கட்டணம் கூடியிருப்பது, கழக ஆட்சியினால் அல்ல!

வரி கோடா இயக்கம் நடத்த அனுமதி கோரி அவர், காமராசருக்குக் கடிதம் எழுதினால், அந்தக் கார்டு—கவரின் விலை உயர்ந்திருப்பது தி.மு க. அரசினால் அல்ல!

அண்மையில் மொரார்ஜி தேசாய் போட்டாரே, புது வரிகள் பலவற்றை—அது, அவரது குசராத் மாநிலத்துக்காக மட்டுமல்ல - நாடு முழுவதுக்கும்தான்!

திருப்பூர் தியாகி, எந்த வரியினை எதிர்த்து இயக்கம் நடத்தப்போகிறார்?

—எஸ். ஆர்.

இருபதாவது சுதந்தர தினம்---

இந்தியாவின் நிலை--

ஓர் பலகணிக் காட்சி!

★

- ★ தலைமையமைச்சர் இல்லத்தின் முன், வங்க அமைச்சர்கள் அறப்போர்—உண்ணாநோன்பு!
- ★ பங்கு மார்க்கெட்டில் நொடிப்பு!
- ★ அமைச்சர்கள் வானொலி பகிஷ்கரிப்பு நீடிக்கிறது!
- ★ 'சிவசேனை' இயக்கம் நகராட்சி தேர்தலில் 17 இடங்களைப் பிடித்தது!
- ★ ஆமணக்கு விதை—உற்பத்தி மேலும் நசிவு!
- ★ ஏமாற்றிய குற்றத்துக்காக அதிகாரிகள் கைது!
- ★ இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷன், பல சர்வீசுகளை ரத்து செய்தது!
- ★ ஊதிய முடக்கம்—இம்மாதம் முடிவு!
- ★ சிமெண்டு விநியோக போர்டில் ஊழல்—கம்பெனி சட்ட அமைப்பு விசாரணை!
- ★ ஜப்பானில் தேசாய்—நீண்டகால உதவி கோரினார்!

பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' சுதந்தர நாள் இதழில் வெளிவந்த செய்திகளின் தலைப்புக்கள்!

காங்கிரசு ஏட்டின் விஷமப் பிரசாரம்!

மன்னிப்பு கோராவிடில் சட்டபூர்வ நடவடிக்கை

19—8—67-ல், கரசங்கால் கிராமத்தில் கூட்டுறவு முறையில் விவசாயப் பண்ணை அமைத்துச் சாகுபடி செய்த பயிரை, டிராக்டரைக் கொண்டும், ஆயுதப் படையினரைக் கொண்டும் அழித்ததாக ஒரு காங்கிரசு நாளேட்டில் வெளிவந்துள்ள செய்தி முற்றிலும் தவறானதும், கண்டிக்கத்தக்கதுமாகும்.

கடந்த ஆண்டு மேய்கால் புறம்போக்கு நிலத்தில் பஞ்சாயத்துப் பசுந்தாள் உரச் சாகுபடிக்காக டிராக்டர் வைத்து உழுது, கொழுஞ்சி விதை விதைக்கப்பட்டது. சில காங்கிரசுக்காரர்கள், அதை மாடுகளை விட்டு மேய்த்து, பஞ்சாயத்து, பொது நன்மைக்காக விதைத்த பசுந்தாள் உரச் செடிகளை அழித்துவிட்டனர். அந்நிலத்தில் யாரும் எந்தவிதத் தானியமும் சாகுபடி செய்யவில்லை.

இவ்வாண்டு 25—2—67-ல் ஊராட்சி மன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, காட்டிலாகாவிற்கு அந்நிலத்தில் காட்டுப் பண்ணை அமைக்க 61 ஏக்கர் 40 செண்ட் ஒதுக்கித் தரப்பட்டது.

காட்டிலாகாவினர், குழிகள் வெட்டி செடிகளை நடும் சமயத்தில், சில போலிக் காங்கிரசுக்காரர்கள், தகராறு செய்யும் நோக்கத்துடன் அவதூறாக ஏர் உழுவதற்குவந்தனர். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கரசங்கால் ஊராட்சி மன்றத்தின் மூலம் பசுந்தாள் சாகுபடி செய்ய சென்ற ஆண்டு டிராக்டர் வைத்து உழப்பட்டதேயன்றி, சாகுபடி செய்த பயிரை அழித்ததாக வந்துள்ள செய்தி முற்றிலும் பொய்யானது. இதுவரையில் யாரும் அந்நிலத்தில் சாகுபடி செய்யவில்லை என்பதும், கரசங்கால் கிராமத்தில் கூட்டுறவு விவசாயப் பண்ணை ஏதும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

"இந்தத் தவறான செய்தியை பிரசுரம் செய்யத் தூண்டியவர்களும், தவறான செய்தியை பிரசுரம் செய்த 'நவசக்தி' இதழும் மன்னிப்புக் கோராவிடில் சட்டப்படி தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என்று, மேற்படியூர் ஊராட்சி மன்றத் தலைவர் கே. வி. இராதாகிருஷ்ணன் அறிவிக்கிறார்.

சைதை மக்கள் மன்றம்

2—7—67 அன்று திரு. சுப்பிரமணியன் தலைமையில் நடந்த சைதை மக்கள் மன்ற செயற்குழு கூட்டத்தில். வீ. பா. சாரதி செயலாளராகவும், என். எஸ். கே. மூர்த்தி பொருளாளராகவும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

‘கூட்டணியா?’ என்று கேட்டவர்கட்கு ஆட்சியில் நாட்டம் பிறக்கும் விந்தை!

மகாமாய பிரசாத் அமைச்சரவைக்கு பிந்தேசுவரி பிரசாத் மண்டல் முற்றுப்புள்ளி வைக்கிறார்!

பீகாரிலும் காங்கிரசுக் கட்சி கைவரிசை!

காங்கிரசு மேலிடம் கைகளைப் பிசைகிறது—
காமராசர் மௌனம் சாதிக்கிறார்!

நம்நாடு செய்தி நோக்கு

பீகார் மாநிலத்தின் ஐந்து மாத கால கூட்டணி அமைச்சரவையைக் கலைக்க ச. சோ. கட்சியின் அமைச்சராக இருக்கும் பிந்தேசுவரி பிரசாத் மண்டல் என்பவரைப் பயன்படுத்தி மாநிலக் காங்கிரசு, பதவி ஆசையை நிறைவேற்றிக்கொள்வதில் வெற்றி பெற்றிருப்பதாகத் தெரிகிறது!

ஞாயிறன்று இரவுடன் முடிந்த இருபத்து நான்கு மணி நேரத்தில், கூட்டணியிலிருந்து விலகியிருக்கும் 40 பேர்களின் துணையுடனும் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டுடனும், தாம், புதிய அமைச்சரவையை அமைக்கப்போவதை அறிவித்திருக்கிறார் மண்டல்!

318 பேர்களைக் கொண்ட பீகார் சட்டமன்றத்தில், காங்கிரசுக் கட்சியின் எண்ணிக்கை 132-ஆக இருப்பதாகத் தெரிகிறது.

“ ச. சோ. கட்சியின் தலைமைக்கும்—அக்கட்சியின் சார்பில் கூட்டு அமைச்சரவையில் உறுப்பினராக இருக்கும் ‘மண்டல்’ என்பவருக்கும் உள்ள மனத்தாங்கலைப் பயன்படுத்தி, அமைச்சரவையை உடைக்கும் முயற்சியில், எதிர்க் கட்சியாக இருக்கும் காங்கிரசு, திட்டமிட்டு முயற்சி செய்து வந்ததன் விளைவே இந்தத் திடீர்த் திருப்பம்” என்பது, பார்வையாளர்களின் கருத்தாக இருக்கிறது!

கூட்டு அமைச்சரவையிலிருந்து மட்டுமல்லாமல், ச. சோ. கட்சியிலிருந்தும் வெளியேறியிருப்பதாக அறிவித்திருக்கும் ‘மண்டல்’ ‘இரண்டாண்டுகளுக்கு முன்னர் காங்கிரசிலிருந்து வெளியேறிய மனிதர்’ என்பது குறிப்பிடத்தக்கது.

“ கூட்டணியிலிருந்து வெளியேறியிருப்பவர்களையும்—காங்கிரசாரையும் சேர்த்துக்கொண்டு மாற்று அமைச்சரவை அமைக்கப் போவதாக அறிவித்திருக்கும் மண்டலின் போக்கு வெற்றி பெறாது” என்று பீகார் முதலமைச்சரும், ச. சோ. கட்சித் தலைமையும் கருதுவதுடன், ‘இது, குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வருவதற்கான மறைமுக நாசவேலை’ என்றும், குறிப்பிட்டிருக்கின்றனர்.

இரண்டாண்டுகளுக்குமுன் தனது கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒருவரை—அவர் இப்போது ஆட்சி அமைப்பதற்கு உதவுகிறார் என்பதற்காக—தலைவராகக் கொண்டு கூட்டு சர்க்காரை நிறுவ விரும்பும் பீகார் மாநில காங்கிரசின் பதவி ஆசையை, ச. சோ. கட்சியைச் சார்ந்த மற்றொரு கூட்டணி அமைச்சர் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

பீகார் திருப்பங்களைப் பற்றி எவ்வித கருத்தும் சொல்லுவதற்குப் புதுடில்லியில் காமராசர் மறுத்திருக்கிறார். காங்கிரசு மேலிடமும், பீகார் மாநிலக் காங்கிரசின் திரை மறைவு செயல்களைப் பற்றி பிரதிபலிப்பு எதனையும் காட்டவில்லை!

மாநிலங்களில் மற்ற கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி சர்க்கார் அமைப்பதற்குக் காங்கிரசு மேலிடம் மறுப்பும், விருப்பமின்மையுமே தெரிவித்து வந்திருக்கிறது!

இப்போது, பீகார் விஷயத்தில் என்ன செய்யப்போகிறது என்பது அனைத்திந்திய பார்வையாளர்களின் ஆவல் பொதிந்த கேள்வியாக இருக்கிறது!

பேசியதும் நடந்ததும்!

“வன்முறைக்கு இந்தியாவில் இடமில்லை”

—டில்லி செங்கோட்டைக்கு எதிரில் நின்று சுதந்தரத் தினத்தன்று தலைமையமைச்சர் இந்திரா பேசியது.

ஆகஸ்டு 17-ம் நாள் செய்தித் தாட்களில் வெளிவந்த தலைப்புகளில் சில :—

- ★ ஆந்திர ஆதிவாழ் மக்கள் பகுதியில் வன்முறைச் செயல்கள் தலைவிரித்தாடுகின்றன!
- ★ கேரளத்தில் வன்முறைச் செயல்கள் பெருகுகின்றன!
- ★ உஜ்ஜெயினியில் நடந்த கோஷ்டிக் கலவரங்களில் 41 பேர் காயமடைந்தனர்.
- ★ வட பம்பாயில் நடைபெற்ற வன்முறை நிகழ்ச்சிகளில் நிறையப் பேர் பாதிக்கப்பட்டனர்!
- ★ பீகார் கிராமங்களில் வன்முறைக் கலவரங்கள்!

நடக்க இருப்பவை

29--8--67

பாலப்பட்டி

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு எம்.ஜி.ஆர். திடலில்; தலைவர் : கே. பி. நடேசன்; பேசுவோர்:நன்னிலம் நடராசன், சி. வே. வேலப்பன் எம்.எல்.ஏ., பொத்தனூர் மணிமாறன், கு. வெங்கடாசலம் பி.ஏ., வி. மணிவாசகம், எம். தாசல், கே. பி. சிவப்பிரகாசம், கவி. தமிழரசு.

சென்னை 60-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மலேசியா சென்று திரும்பிய அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களுக்குப் பாராட்டு; இரவு 7-மணிக்கு இராயப்பேட்டை--புதுப்பேட்டை தோட்டத் தெருவில்; தலைவர் : கே. எஸ். தங்கவேல்; பேசுவோர் : அமைச்சர் மு. கருணாநிதி, நீலநாராயணன், கோ. இளவரசு எம்.சி., மற்றும் பலர்,

சென்னை 84-வதுவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்

என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும்

“31—8—67 இரவு 9-மணிக்கு, சென்னை 84-வது வட்ட தி.மு. கழகச் செயற்குழுக் கூட்டம், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள் தலைமையிலும் — மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் முன்னிலையிலும் மயிலைப் பகுதி தி. மு. க. அலுவலகத்தில் நடைபெறும்” என்று மயிலைப் பகுதிச் செயலாளர் எஸ். வி. வேலு அறிவிக்கிறார்.

ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு
ஏஜெண்டுகள் தேவை--

கதிர் மார்க்கு
பெர்ட்டிலைசர்களுக்கு

★ சூப்பர் பாஸ்பேட்
★ சல்பேட்
★ மிக்சர்
★ புண்ணாக்குத் தூள்

கரும்பு ஆலைகளுக்கும் சாயப் பட்டறைகளுக்கும் உபயோகப் படுத்தும்

‘ஹைட்ரோஸ்’

முன்பணம் செலுத்தி எடுத்து விற்பனை செய்ய.

விவரங்களுக்கு எழுதவும் :—
நேஷனல் கெமிகல் கார்ப்பொரேஷன்,
1, நேரு நகர் — பாண்டிச்சேரி-1.

SA

‘போதிய பாதுகாப்பு அளிக்கப்படவில்லை’

வெ கிருட்டிணமூர்த்தி உமாநாத் தகவல்

பம்பாய், ஆக. 27—

கடந்த ஆகஸ்டு 15-ம் நாளன்று மகாராட்டிரத்திலுள்ள சயான்; கோல்வாடா ஆகிய பகுதிகளில் சிவசேனையின் வெறிச்செயல்கள் நடந்ததையொட்டி தகவல் சேகரிக்க இங்கு வந்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெ. கிருட்டிணமூர்த்தி, உமாநாத் ஆகிய இருவரும், மொழிவழியில் சிறுபான்மையினராக உள்ள மக்களுக்கு இன்னும் பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை’ எனக் கூறினர். இதுபற்றி அவர்கள் குறிப்பிட்டிருப்பதாவது :—

“போதிய பாதுகாப்பு இல்லை என்றுதான் கூறமுடியும்; சிறுபான்மையோர் தாக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று மக்களிடமிருந்து தகவல் அறிந்தோம்.”

இவர்கள் இருவரும் மகாராட்டிர முதலமைச்சர் நாயக்கையும் சந்தித்துப் பேசினர். இருவரும் தங்கள் கட்சிகளிடம் இன்னும் இரு நாட்களில், இது தொடர்பாக அறிக்கைகளை அளிப்பார்கள்.

இவர்களிருவரும் சென்னை திரும்பிவிட்டனர்.

சென்னை மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் அவசரக் கூட்டம்

30—8—67 புதன் இரவு 7 மணிக்கு சென்னை மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் அவசரக் கூட்டம், தேனாம்பேட்டை ‘அன்பக’த்தில் நடைபெறும்; உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் :— அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா.

--- நீலநாராயணன்
செயலாளர், சென்னை
மாவட்ட தி. மு. க.

டிவிஎஸ்
டெலிவரி வான் பாடி

எண்ணெய்ச் செலவும் டயர் தேய்மானமும் குறைவு. பல்லாண்டுகள் உழைக்கும். உறுதியானது.

பாடிகள் கட்டுவதில் சுமார் நாற்பது ஆண்டுகள் அனுபவமுள்ளது டிவிஎஸ். அவரவர் தேவைக்கேற்ப எந்தவிதமான சேஸிஸ் மீதும் லேசான, உழைப்பிற்கு உறுதியான பாடிகளைத் தயாரிக்கிறது டிவிஎஸ்.

TVS

டிவிஎஸ் — இந்தியாவிலேயே பாடிகள் கட்டுவதில் மிகப்பெரிய ஸ்தாபனம்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்—மதுரை (டிவிஎஸ் ஸ்தாபனம்)

SI/4252

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும். அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை,13,) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.